பல்வேறு மாவட்டங்களில் மின்சாரம் தாக்கி உயிரிழப்பு

14 பேர் குடும்பத்திற்கு தலா ரூ.3 லட்சம் உதவி

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி உத்தரவு

சென்னை, ஆக.31:

சென்னை சூளைமேடு காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் குடும்பம் உட்பட பல்வேறு மாவட்டங்களில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த 14 பேர் குடும்பத்திற்கு தலா ரூ.3 லட்சம் நிதியுதவி வழங்க முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக முதலமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பது வருமாறு:-

தேனி போக்குவரத்து காவல் ஆய்வாளராகப் பணியாற்றி வந்த ரவி உடல்நலக் குறைவு காரணமாக காலமானார், சென்னை சூளைமேடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த ஜெயராமலிங்கம் என்பவர் சிகிச்சை உயிரிழந்தார், சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் காவல் நிலையத்தில், தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த ராஜேஷ் சாலை விபத்தில் உயிரிழந்தார், கன்னியாகுமரி மாவட்டம், விளாத்துறை கிராமத்தைச் சேர்ந்த வெங்கடாசலம் என்பவரின் மனைவி தங்கம்மாள் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார், விழுப்புரம் வட்டம், தொட்டி கிராமத்தைச் சேர்ந்த கோதண்டபாணி என்பவரின் மனைவி தனலட்சுமி மின்சாரம் தாக்கி உயிரிழந்தார், திண்டுக்கல் மாவட்டம், பாளையங்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த பெரியசாமி என்பவரின் மகன் விமல்குமார் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார், தஞ்சாவூர் மாவட்டம், கோவிலடி கிராமத்தைச் சேர்ந்த அமிர்தம் என்பவரின் மகன் கனகராஜ் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததால் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார், கன்னியாகுமரி மாவட்டம், வீயன்னூர் ஆ கிராமத்தைச் சேர்ந்த தாசன் என்பவரின் மகன் பிரின்ஸ் சேவியர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார், கன்னியாகுமரி மாவட்டம், புத்தன்கடை, கைதட்டுகோணம் பகுதியைச் சேர்ந்த ஜாண் ரோஸ் என்பவரின் மகன் சுஜின் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார், விளவங்கோடு வட்டம், கொல்லங்கோடு ஏ கிராமத்தைச் சேர்ந்த யோனா என்பவரின் மகன் கனகராஜ் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார், நாமக்கல் மாவட்டம், குருசாமிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த செல்வகுமார் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார், விழுப்புரம் மாவட்டம், கொங்கராயனூர் கிராமத்தைச் சேர்ந்த சாமிநாதன் என்பவரின் மனைவி பேபி மற்றும் அவருடைய மகன் எழில்குமார் ஆகிய இருவரும் மின்வேலியில் சிக்கி உயிரிழந்தனர், ஈரோடு மாவட்டம், சிவகிரி கிராமத்தைச் சேர்ந்த செல்வகுமார் என்பவரின் மகள் சாருலதா மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தார் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவலர்கள் மற்றும் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இத்துயரச் சம்பவங்களில் உயிரிழந்த 14 நபர்களின் குடும்பங்களுக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

எம்.ஆர்.எஃப் நிறுவனத்தின் புதிய கார் டயர்கள் அறிமுகம்



சென்னை, ஆக.31:

இந்தியாவின் மிகப்பெரிய டயர் தயாரிப்பு நிறுவனமான எம்.ஆர்.எஃப் நிறுவனம், பர்ஃபின்ஸா என்ற லக்சரி மற்றும் ப்ரீமியம் வகை டயர்களை அறிமுகம் செய்துள்ளது.

இது தொடர்பாக அந்நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: ஒரு உலகளாவிய முன்னணி லச்கரி கார் தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெறுவதற்கு ஒரு இந்திய நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட முதல் டயர் என்ற பெருமையை, பர்ஃபின்ஸா டயர் மூலம் எம்.ஆர்.எஃப் பெற்றுள்ளது. இதன் மூலம், லக்சரி மற்றும் பிரீமியம் வாகனப்பிரிவுகளுக்கான தயாரிப்புகளை எம்.ஆர்.எஃப் நிறுவனம் அதிக எண்ணிக்கையில் வழங்கிவருகிறது. தொடக்கத்தில் இந்தியாவிற்கும் அதன்பிறகு இதர உலக சந்தைகளுக்கும் இந்த டயர்கள் வெளியிடப்படும். இந்த டயர்கள் லக்சரி மற்றும் ப்ரீமியம் செடான் கார்களுக்காக பிரத்யேகமாக உருவாக்கப்பட்டு, இந்தியா, ஜெர்மனி மற்றும் ஸ்பெயினில் ஈரமான மற்றும் உலர்ந்த நிலைகளில் விரிவான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு படுநேர்த்தியாக்கப்பட்டுள்ளது. இதற்கென இந்தியா முழுவதும் ஷோரூம்கள் உள்ளன. சமச்சீரான ஓட்டம், கையாளுதல், இழுவை மற்றும் அனைத்து பருவநிலைகளிலும் ஒரு நல்ல கட்டுப்பாடையும் வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றன. கிரிக்கெட் வீரர் ஏ.பி.டி.வில்லியம்ஸ் இந்த புதிய பிராண்டின் தூதராக அறிமுகம் செய்யப்பட்டுள்ளார் என்றார்.

கட்சி பொறுப்பில் இருந்து அமைச்சர் நீக்கம்: தினகரன்

சென்னை, ஆக.31:

தூத்துக்குடி மாவட்ட ஜெயலலிதா பேரவை செயலாளர் பொறுப்பில் இருந்து அமைச்சர் கடம்பூர் ராஜூவையும், மாவட்ட செயலாளர் பொறுப்பில் இருந்து சி.த.செல்லப்பாண்டியனையும் நீக்கி இருப்பதாகவும் அதிமுக அம்மா அணி துணைப்பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் கூறியுள்ளார்.

இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர் பொறுப்பில் இருந்து ஒட்டப்பிடாரம் எம்எல்ஏ ஆர்.சுந்தரராஜனும், தெற்கு மாவட்ட செயலாளர் பொறுப்பில் இரா.ஹென்றி தாமசும் நியமிக்கப்படுவதாக கூறி உள்ளார்.

மேலும் விவசாய பிரிவு துணை செயலாளராக எம்.வி.கருப்பையா முன்னாள் எம்எல்ஏவும், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளராக பா.சீனிவாசனும் நியமிக்கப்படுவதாக கூறிஉள்ளார்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் பொறுப்பில் இருந்து வி.அலெக்சாண்டர் எம்எல்ஏ நீக்கப்பட்டு இருப்பதாகவும் அவர்தனது அறிக்கையில் கூறியுள்ளார். மாவட்டம் வாரியாக கட்சி செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளை தினகரன் கடந்த சில நாட்களாக தொடர்ந்து நீக்கி வருவது குறிப்பிடத்தக்கது.

திருவள்ளூரில் 2-ம் தேதி நடக்கிறது

எம்ஜிஆர் நூற்றாண்டு விழா புகைப்பட கண்காட்சி

திருவள்ளூர், ஆக.31:

திருவள்ளூர் அடுத்த திருமழிசை பேருந்து நிலையத்தில் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் புகைப்படக் கண்காட்சியை கலெக்டர் சுந்தரவல்லி திறந்து வைத்து பார்வையிட்டார்.

திருவள்ளூர் மாவட்டம் பஞ்செட்டியில் வரும் 2 ம் தேதி அன்று எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா நடைபெறுகிறது. அதனைத் தொடர்ந்து இந்த புகைப்படக் கண்காட்சி 27 ம் தேதி முதல் தொடங்கி 2 ம் தேதி வரை இங்கு நடைபெறவுள்ளது.

இதன் மூலமாக எம்.ஜி.ஆர் வாழ்க்கை வரலாறு, முதல்வராக இருந்த காலங்களில் ஆற்றிய பணிகள், தலைவர்கள் சந்திப்பு போன்ற பல அறிய புகைப்படங்கள் இக்கண்காட்சியில் இடம் பெற்றன.

மேலும் அதி நவீன மின்னணு வாகனத்தின் மூலம் திருவள்ளூர் மாவட்டம்முழுவதும்டாக்டர்எம்.ஜி.ஆர் நிகழ்ச்சிகளின் தொகுப்புகள் ஒளி, ஒலி காட்சிகளுடன் ஒளிபரப்பப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார்.

இதில் பேரூராட்சி உதவி இயக்குநர் செந்தில் குமார், திருமழிசை பேரூராட்சி செயல் அலுவலர் ரவி, பூவிருந்தவல்லி வட்டாட்சியர் ரமா, பேரூராட்சி செயல் அலுவலர் ரவி, பூந்தமல்லி வட்டாட்சியர் ரமா, பேரூராட்சி பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

பூட்டிய வீட்டில் திருட்டு

அம்பத்தூர், ஆக.31:

திருமுல்லைவாயல் வெங்கடேசநகர், 10வதுதெருவைச்சேர்ந்த காளிராஜ் (வயது38).இவர் குடும்பத்துடன் சொந்த ஊருக்குசென்று விட்டு நேற்றிரவு வீடு திரும்பினார்.

அப்போது அவரது வீட்டின் பூட்டை உடைத்து பீரோவில் இருந்த 5 சவரன் நகையை மர்ம ஆசாமிகள் திருடி சென்றுள்ளது தெரியவந்தது.

இதுகுறித்து திருமுல்லைவாயல்போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ENROLMENT NOTICE

After ten days of the publication of this notice and within THREE Months thereafter, I **S.SUGANYA** D/o.V.Sekar aged 22 years Permanently residing at No.16, Durgaiamman Kovil Street, Uthiramerur Town, Kancheepuram D.t. intend having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamilnadu, Bar Council Buildings, High court Campus, Chennai-104.

Those who have any valid Objections may Notify the same to the Bar Council within 10 days.

S.SUGANYA

பெயர் மாற்றம்

சென்னை-600 116, வளசரவாக்கம், ஆலப்பாக்கம், 6-வது தெரு, அஷ்டலட்சுமி நகர், சுஷோ அபார்ட்மென்ட்ஸ், 1-வது தளம், A6 என்ற முகவரியில் குடியிருக்கும் திரு. V.V.ராமநாதன் என்பவரின் மகளாகிய **கமலா. V.R. (KAMALA.V.R.)** என்கிற நான் (பிறந்த தேதி: 14.11.1980) இனிமேல் **கமலா ராமநாதன் (KAMALA RAMANATHAN)** என்று அறியப்படுவேன்.

கமலா. V.R.
KAMALA.V.R.

பெயர் மாற்றம்

விழுப்புரம்-606 206, கள்ளக்குறிச்சி தாலுகா, பிரிதிவி மங்கலம் அஞ்சல், மடம், எண்.2/62 என்ற முகவரியில் குடியிருக்கும் திரு. தசரதன் என்பவரின் மகனாகிய **பழனியாபிள்ளை தசரதன் (PAZHANIYAPILLAI DHASARADAN)** என்கிற நான் (பிறந்த தேதி: 06.03.1992) இனிமேல் **பழனியாபிள்ளை தசரதன் (PALANIYAPILLAI THASARATHAN)** என்று அறியப் படுவேன்.

பழனியாபிள்ளை தசரதன்
PAZHANIYAPILLAI DHASARADAN

பெயர் மாற்றம்

சென்னை-600 125, மதனந்தபுரம், நேதாஜி தெரு, லா செலஸ்டி, P6B3B என்ற முகவரியில் குடியிருக்கும் திரு. மகேஷ் மதுக்கர் கேஸ்கர் என்பவரின் மனைவியாகிய **குல்கர்னி பிரதித்தின்யா கோவிந்த்ராவ் (KULKARNI PRATIDNYA GOVINDRAO)** என்கிற நான் (பிறந்த தேதி: 26.11.1975) இனிமேல் **ராதிகா மகேஷ் கேஸ்கர் (RADHIKA MAHESH KESKAR)** என்று அறியப்படுவேன்.

குல்கர்னி பிரதித்தின்யா கோவிந்த்ராவ்
KULKARNI PRATIDNYA GOVINDRAO

பெயர் மாற்றம்

திருவள்ளூர்-631 205, சிறுங்குனி, பாகவதபுரம், பஜனை கோயில் தெரு, எண்.134 என்ற முகவரியில் குடியிருக்கும் திரு. அனுமந்தராஜி என்பவரின் மகனாகிய **ஹேமாத்ரி (HEMADRI)** என்கிற நான் (பிறந்த தேதி: 17.06.1989) இனிமேல் **ஹேமாத்ரி ராஜு (HEMADRI RAJU)** என்று அறியப் படுவேன்.

ஹேமாத்ரி
HEMADRI

STG ஸ்விட்சிங் டெக்னாலஜீஸ் குந்தர் லிமிடெட்

CIN:L29142TN1988PLC015647

பதிவு அலுவலகம்: பி9 மற்றும் பி10, மெப்ஸ் சிறப்பு பொருளாதார மண்டலம், கடப்பேரி, சென்னை-600 045.

அறிவிப்பு

கூட்டம் தொடர்பான அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட அலுவல்கள் பற்றி பரிசீலிப்பதற்காக கம்பெனியின் 29-வது வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டம் 27.09.2017 புதன்கிழமையன்று பிற்பகல் 2.30 மணியளவில் ஹோட்டல் கிராண்ட் பேலஸ், எண்.257, ஜி.எஸ்.டி.ரோடு, குரோம்பேட்டை, சென்னை-600 044 என்ற முகவரியில் நடைபெற உள்ளது என்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. பங்குதாரர்கள் பதிவேடும், பங்குமாற்று புத்தகங்களும் 21.09.2017 வியாழக்கிழமை முதல் 27.09.2017 புதன்கிழமை வரை (இந்த இரு தினங்கள் உள்பட) மூடப்பட்டி ருக்கும். வருடாந்திர அறிக்கை இணைக்கப்பட்ட கூட்டம் தொடர்பான அறிவிப்பானது பங்குதாரர்களுக்கு அவர்களது பதிவு செய்யப்பட்ட முகவரிகளுக்கு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட விவரங்களின் படி ஒரு பங்குதாரர் கூட்டத்தில் கலந்துகொண்டு நேரிலோ அல்லது தனது பதிலி மூலமாகவோ வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்.

ஸ்விட்சிங் டெக்னாலஜீஸ் குந்தர் லிமிடெடுக்காக
P ரமேஷ்
நிர்வாக இயக்குனர் மற்றும் பின்பற்றுகை அதிகாரி

இடம் : சென்னை-45
தேதி : 30.08.2017

டைனாவிஷன் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 3-வது தளம், ஜாவர் பிளாசா, எண்.1-A, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-600 034.

CIN No: L32301TN1973PLC006439

30.06.2017 அன்றுடன் முடிந்த காலாண்டுக்கான தனிப்பட்ட தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

(ரூபாய் லட்சங்களில்)

வ. எண்.	விவரங்கள்	முடிந்த 3 மாதங்கள் 30.06.2017	முடிந்த இணையான 3 மாதங்கள் 30.06.2016
1.	செயல்பாடுகளில் இருந்து மொத்த வருமானம்	158.03	126.11
2.	நடப்பு காலத்துக்கான நிகர லாபம் /(நஷ்டம்) (வரி, விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு முந்தையது)	139.10	103.74
3.	வரிக்கு முந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு பெற்ற இனங்கள் மற்றும்/ அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது)	139.10	103.74
4.	வரிக்கு பிந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு பெற்ற இனங்கள் மற்றும்/ அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது)	107.10	76.84
5.	நடப்பு காலத்திற்கான மொத்த விரிவான வருவாய் (நடப்பு காலத்துக்கான லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பிந்தையது) மற்றும் இதர விரிவான வருவாய் (வரிக்கு பிந்தையது) ஆகியவற்றை உள்ளடக்கியது)	107.10	76.84
6.	சமபங்கு மூலதனம்	383.79	383.79
7.	பங்கு ஒன்றின் வருவாய் (தலா ரூ.10/-) (தொடர்ச்சியான மற்றும் தொடர்ச்சி இல்லாத செயல்பாடுகளுக்கானது) 1. அடிப்படை: 2. திட்டம் குறைந்தது:	 2.79 2.79	 2.00 2.00

குறிப்பு: மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான படிவத்தின் சுருக்கமான அறிக்கையாகும். மேற்சொன்ன காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு படிவத்தையும் பங்கு வர்த்தக நிறுவனத்தின் இணையதளத்திலும் (www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளத்திலும் (www.dynavision.in) காணலாம்.

டைனாவிஷன் லிமிடெடுக்காக
R.P.அக்ரவால்
இயக்குனர்

இடம் : சென்னை
தேதி : 30.08.2017

PUBLIC NOTICE

My client N.Santhanam S/o.Nainiappan No.12, Second Lane, Jaganathapuram first Street, Chetpet, Chennai-600 031. was lost his document in the transist while travelling to his daughter's house at Chetpet. (Document No.1579/1984) in S.No.90/4 in Village No.59, oragadam, an extent of 2400 sq.ft of land.

registered as Doc.No.1579 of 1984 before the Sub Registration district of Ambattur.

original document was lost in the transit while travelling to my daughter's house at chetpet.

K.MOHAMED NAZAR
Advocate
No.1, Mukkia Amman Koil Street,
Chintadripet, Chennai-2.
Ph: 99627 48708.

பாஸ்போர்ட் காணவில்லை

திருச்சி பிராந்திய பாஸ்போர்ட் அலுவலகத்தில் **22.11.2013** அன்று எனது மகளுக்கு வழங்கப்பட்ட, ஒரிஜினல் **பாஸ்போர்ட் எண்.L6074651**ஐ தவறுதலாக அடையாறில் தொலைத்துவிட்டேன் என்பது இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது. இதனை கண்டெடுப்பவர்கள் தயவுசெய்து கீழே குறிப்பிடப்பட்ட எனது முகவரிக்கு தொடர்புகொண்டு என்னிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவர்களுக்கு தக்க சன்மானம் வழங்கப்படும்.

T.மூர்த்தி,
எண்.3/100, குழிதேவன் காடு,
பஞ்சநதிகுளம் மிடில் போஸ்ட்,
வேதாரண்யம் தாலுகா,
நாகப்பட்டினம்-614 714.

பாஸ்போர்ட் காணவில்லை

சென்னை பிராந்திய பாஸ்போர்ட் அலுவலகத்தில் 14.10.2015 அன்று எனக்கு வழங்கப்பட்ட ஒரிஜினல் பாஸ்போர்ட் எண். N3836696ஐ (சென்னை) தவறுதலாக 26.8.2017 அன்று குரோம்பேட்டையில் தொலைத்துவிட்டேன் என்பது இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது. இதனை கண்டெடுப்பவர்கள் தயவுசெய்து கீதே குறிப்பிடப்பட்ட எனது முகவரிக்கு தொடர்புகொண்டு என்னிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

J.BERNARD KATHIRAVAN
Age-33 Years, G-1,
Sun Udhayam Raj Apartments,
Plot-9, Rambak Shi Nagar,
Hasthinapuram, Chennai-64.

கடன் வசூல் தீர்ப்பாயம்-II, சென்னை முன்பாக

தேவா டவர்ஸ், 4-வது தளம்,
எண். 770-A, அண்ணா சாலை,
சென்னை- 600 002.

ஓரிஜினல் விண்ணப்பம் எண்.310/2017

கனரா வங்கி, கிண்டி கிளை,
எண்.1, ஜவஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை- 600 0132.
அதன் சார்பாக தலைமை மேலாளர்
....மனுதாரர்

-எதிர்-

மெஸார்ஸ் அக்கூரேட் பிட்டிங்ஸ்,
அதன் சார்பாக அதன் உரிமையாளர்
திரு. எஸ்.வெள்ளைச்சாமி,
...எதிர் மனுதாரர்

பெறுநர்
திரு. எஸ். வெள்ளைச்சாமி,
அதன் சார்பாக அதன் உரிமையாளர்
மெஸார்ஸ் அக்கூரேட் பிட்டிங்ஸ்,
எண்.2, முதல் குறுக்கு தெரு, விசாலாட்சி நகர்,
இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் , கிண்டி,
சென்னை- 600 032.

கடன் தொகை ரூ.41,45,319.31 மற்றும் வட்டி மற்றும் இதர கட்டணங்கள் சேர்ந்த தொகையை வசூலிப்பதற்காக எதிர்மனுதாரருக்கு எதிராக மேற்காணும் ஓரிஜினல் விண்ணப்பம் எண்.310/2017 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் அறியவும்.

மேற்சொன்ன வழக்கு 12.09.2017 அன்று காலை 10.30 மணிக்கு சென்னை, கடன் வசூல் தீர்ப்பாயம்-2, பதிவாளர் அவர்கள் முன்பு தங்கள் வருகைக்காக போடப்பட்டுள்ளது. தயவு கூர்ந்து தாங்கள் மேற்கண்ட தேதியில் தாங்கள் நேரிலோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். தவறும்பட்சத்தில் தாங்கள் வராத நிலையிலும் விசாரணை மேற்க்கொள்ளப்பட்டு தங்களுக்கு எதிராக உரிய முடிவுகள் எடுக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

மெஸார்ஸ் **K.R.A. முத்துக்கிருஷ்ணன்**
P. ஆனந்த்
வழக்குரைஞர்கள்
480-C/171, 5-வது மாடி ,
கூடுதல் சட்ட அறைகள்,
உயர்நீதிமன்றம், சென்னை- 600 104.

பொது அறிவிப்பு

மயிலாப்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணம் எண்.131/1953, தேதி: 04.02.1953 எனபதிவு செய்யப்பட்ட ஒரிஜினல் விற்பனை பத்திரத்தை எனது கட்சிக்காரர் திரு. S.குமார் என்பவர் 24.08.2017 அன்று சென்னை மந்தைவெளி பேருந்து நிலையம் அருகில் தவறுதலாக தொலைத்துவிட்டார் என்பது இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேற்சொன்ன ஆவணத்தை கண்டெடுக்கும் ஏதேனும் நபர் மற்றும் தனது சுவா தீனத்தில் வைத்திருக்கும் ஏதேனும் நபர் இந்த அறிவிப்பு வெளியான தேதியில் இருந்து 15 தினங்களுக்குள் கீழே குறிப் பிடப்பட்ட எனது முகவரியில் தயவு செய்து திருப்பி ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சங்கர் வரதராஜன்,
வழக்கறிஞர்,
எண்.12/6, அப்பாவு கிராமணி 1-வது தெரு, மந்தைவெளி, சென்னை-600 028.
கைபேசி: +91 97911 69369

Mercantile

மொர்க்கன்டைல் வென்ச்சர்ஸ் லிமிடெட்
CIN: L65191TN1985PLC037309
பதிவு அலுவலகம் : 88, மவுண்ட் ரோடு,
கிண்டி, சென்னை - 600 032.
Website: www.mercantileventures.co.in
Email: admin@mercantileventures.co.in

அறிவிப்பு

தேசிய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிபடுத்தல் தேவைகள்) கட்டுப்பாடுகள், 2015ன் கட்டுப்பாடு 47ன் படி, 30 ஜூன், 2017 அன்று முடிந்த காலாண்டிற்கான நிறுவனத்தின் தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து, அங்கீகரிக்க, நிறுவனத்தின் இயக்குநர் குழுக்கூட்டம் வெள்ளிக்கிழமை 08 செப்டம்பர் 2017 அன்று நடைபெறவுள்ளது என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த தகவல் மும்பை ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் இணையதளம் (www.bseindia.com) மற்றும் நிறுவனத்தின் இணைய தளத்திலும் கிடைக்க செய்யப்படும்.

மொர்க்கன்டைல் வென்ச்சர்ஸ் லிமிடெட்டிற்காக

இடம்: சென்னை
தேதி : 31.08.2017

E N ரங்கஸ்வாமி
முழுநேர இயக்குநர்

சென்னை உயர் நீதிமன்றம்

(உயில் மற்றும் உயில் இல்லாத வழக்கு பற்றிய ஆள் வரை)

முதலேற்பு மனு எண்.443/2017

(இந்திய வாரிசு உரிமைச் சட்டம் (XXXIX of 1925) தொடர்பான மனுவில் 04.07.2015 போன திருமதி.சுனந்தா கோத்தா அவர்களின் வாரிசு உரிமை கோரும் மனு

1. திரு.கே.வி.கோபிகிருஷ்ணா
9/2, ராகவேந்திரா முதல் தெரு,
பாலையா கார்டன், சதாசிவம் நகர்,
மடிப்பாக்கம்,
சென்னை-600 091.
2. இளவல் நந்தகிஷோர்
3. இளவல் விஷ்வப்பிரியா
(இரு மைனர்களுக்கும்
அவர்களின் தந்தையான திரு.
கே.வி.கோபிகிருஷ்ணா அவர்கள்
பாதுகாவலராக இருந்து இதை
நடத்துகிறார்கள்)

..மனுதாரர்கள்

சென்னை-600 091, மடிப்பாக்கம், சதாசிவம் நகர், பாலையா கார்டன், ராகவேந்திரா முதல் தெரு, எண்.9/2 இல் வசித்து வந்த 2015-ஆம் வருடம் ஜூலை மாதம் 4-ம் தேததி இறந்து போனவருமான திருமதி சுனந்தா கோத்தா அவர்களின் பணி பலன்கள் கோரும் மனு சம்மந்தமாக யாராவது பாத்தியதை கோருகிற அனைவரும் தங்களுக்கு தக்கதென கருதினால் நீதிமன்றம் வாரிசு உரிமை சான்றிதழ் வழங்கப்படுவதற்கு முன்பு சென்னை உயர்நீதிமன்றம் மாஸ்டர் கோர்டில் 05.09.2017 அன்று காலை 10.30 மணிக்கு நடவடிக்கைகளைப் பார்த்து தங்களது ஆட்சேபணைகளைத் தெரிவித்துக்கொள்ளுமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறார்கள்.

2017-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 29-ம் தேதியில் சென்னையில் கையொப்பமிட்டது.

(க.அறிவழகன்)
உதவி பதிவாளர்,
முதலேற்பு பிரிவு- I
உயர்நீதிமன்றம், சென்னை.

M/s.**சுவாமிநாதன்**
லா அசோஸியேட்ஸ்,
9, நாகமணி தெரு,
சிந்தாதரிப்பேட்டை
சென்னை-600 002.

மாலைச்சுடரில் விளம்பரம் செய்து பயன்பெறுங்கள்

Iykot ஐகாட் ஹைடெக் டூல்ரூம் லிமிடெட்

பதிவு அலுவலகம்: எண்.19, பிளாக்-1, சிட்கோ எலக்ட்ரானிக்ஸ் காம்ப்ளக்ஸ், கிண்டி, சென்னை-600 032.

CIN:L27209TN1991PLC021330, Tele Fax: 044 - 4316 2280; Email: info@iykot.com

30.06.2017 அன்றுடன் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் (தற்காலிகமானது)

(ரூபாய் லட்சங்களில்)

வ. எண்.	விவரங்கள்	முடிந்த காலாண்டு 30.06.2017 த.ஆகாதது	முடிந்த காலாண்டு 31.03.2017 த.ஆகாதது	முடிந்த காலாண்டு 30.06.2016 த. ஆகாதது	முடிந்த ஆண்டு 31.03.2017 த.ஆனது
1.	செயல்பாடுகளில் இருந்து மொத்த வருமானம்	112.37	84.3	142.17	772.45
2.	வட்டி/தேய்மானம்/வரிக்கு முந்தைய மொத்த வருவாய்	0.84	-34.58	-4.16	44.86
3.	வரிக்கு முந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும்/அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது)	-4.51	-39.85	-9.09	24.57
4.	வரிக்கு பிந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும்/அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது)	-4.51	-39.85	-9.09	28.29
5.	நடப்பு காலத்துக்கான மொத்த விரிவான வருவாய் (நடப்பு காலத்துக்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பிந்தையது) மற்றும் இதர விரிவான வருவாய் (வரிக்கு பிந்தையது) ஆகியவற்றை உள்ளடக்கியது)	-4.51	-39.85	-9.09	28.29
6.	சம பங்கு மூலதனம்	304.2	304.2	304.2	304.2
7.	முந்தைய ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட பேலன்ஸ்ஷீட் படி ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வு நீங்கலானது)	-	-	-	46.23
8.	பங்கு ஒன்றின் வருவாய் (தலா ரூ.5/-) (சிறப்பு ரகங்களுக்கு முந்தையது மற்றும் பிந்தையது) 1. அடிப்படை: 2. திட்டம் குறைந்தது:	-0.08	-0.65	-0.15	0.46

குறிப்பு:
அ) மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனங்களில் தாக்கல் செய்யப்பட்ட காலாண்டு/வருடாந்திர நிதிநிலை முடிவுகளின் விரிவான படிவத்தின் சுருக்கமான அறிக்கையாகும். மேற்சொன்ன காலாண்டு/வருடாந்திர நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் பங்கு வர்த்தக நிறுவனங்களின் இணைய தளங்களில் காணலாம். (URL of the filings)
ஆ) கணக்கியல் வழிமுறைகளில் மாற்றம்(கள்) காரணமாக நிகர லாபம்/நஷ்டம் மீதான தாக்கம், மொத்த விரிவான வருவாய் அல்லது வேறு ஏதேனும் போதுமான நிதிநிலை முடிவுகள் ஆகியவை குறிப்பாக கணக்கிட்டு காட்டப்படும்.
இ) Ind-AS Rules / AS Rules விதிமுறைகளின் படி பொருத்தமானவற்றில் விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்கள் லாப/நஷ்டம் அறிக்கையில் சரிசெய்யப்பட்டுள்ளது.

ஐகாட் ஹைடெக் டூல்ரூம் லிமிடெடுக்காக
ஒ-ம்/- S.ஐயம்பாண்டி
நிர்வாக இயக்குனர்

இடம்: சென்னை.
தேதி: 30.08.2017

அரிஹந்த் பவுண்டேஷன்ஸ் & ஹவுசிங் லிமிடெட்

CIN: L70101TN1992PLC022299

பதிவு அலுவலகம்: எண்.3, கணபதி காலனி, 3-வது தெரு, செனட்டாப் சாலை அருகில், தேனாம்பேட்டை, சென்னை-600 018. போன்: 044-42244444

பங்குதாரர்களுக்கு அறிவிப்பு

கம்பெனியின் 24-வது வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டம் 22.09.2017 வெள்ளிக்கிழமையன்று, காலை 9.30 மணியளவில் 'அரிஹந்த் தியரா', மனை எண்.2பி, டிசிஎன்எஸ் கார்டன், நந்தம்பாக்கம், சென்னை-600 089 என்ற முகவரியில் நடைபெறும் என்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

31.03.2017 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கை மற்றும் தொகுக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை, தணிக்கையாளர்களின் அறிக்கை, இயக்குனர்களின் அறிக்கை, ரொக்கப்பரிவர்த்தனைகள் அறிக்கை ஆகியவை இணைக்கப்பட்ட, பரிசீலிக்கப்பட உள்ள சாதாரண மற்றும் சிறப்பு அலுவல்கள் குறிப்பிடப்பட்ட அறிவிப்பானது பங்குதாரர்களின் பதிவுசெய்யப்பட்ட முகவரிகளுக்கு பதிவு நூல் அஞ்சல் மூலமாகவும், தங்களது இ-மெயில் முகவரிகளை கம்பெனியில் பதிவுசெய்துள்ள பங்குதாரர்களுக்கு மின்னணுவியல் அஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது.

கூட்டம் தொடர்பான அறிவிப்பும், மேற்சொன்ன ஆவணங்களும் கம்பெனியின் இணையதளத்திலும் (www.arihantfoundations.com), மேலும் மேற்சொன்ன ஆவணங்களின் நகல்கள் கம்பெனியின் பதிவு அலுவலகத்திலும் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது என்பதும், கூட்டம் நடைபெறும் தேதி வரை அனைத்து வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களின்போது அவைகளை பார்வையிடலாம் என்பதும் பங்குதாரர்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டத்தில் கலந்துகொண்டு வாக்களிக்கும் உரிமை பெற்ற ஒரு பங்குதாரர் தேர்தலில் அவருக்குப்பதிலாக கூட்டத்தில் கலந்துகொண்டு அவரது சார்பில் வாக்களிப்பதற்காக பதிலி ஒருவரை நியமனம் செய்யலாம். அந்தப் பதிலியானவர் கம்பெனியின் பங்குதாரராக இருக்கத் தேவையில்லை. கூட்டம் துவங்குவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பாக பதிலி நியமனம் குறித்த ஆவணங்களை கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

2013-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின் 91-வது பிரிவின் கீழும், 2014-ம் வருடத்திய கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிமுறைகளில் 10-வது விதிமுறையின் கீழும், பங்குவர்த்தகம் பட்டியலிடும் ஒப்பந்தத்தின் 16-வது ஷரத்தின் படியும், 2016-17 நிதியாண்டுக்கான வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டத்தை முன்னிட்டு கம்பெனியின் பங்குதாரர்கள் பதிவேடும், பங்கு மாற்றுப்புத்தகங்களும் 16.09.2017 முதல் 22.09.2017 வரை (இந்த இரு தினங்கள் உள்பட) மூடப்பட்டிருக்கும்.

2013-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின் 108-வது பிரிவின் கீழும், 2014-ம் வருடத்திய கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிமுறைகளில் 20-வது விதிமுறைகளின் கீழும், மேற்கூறியபடி 22.09.2017 வெள்ளிக்கிழமையன்று நடைபெற உள்ள கம்பெனியின் வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டத்தில் ('கூட்டம்') நிறைவேற்றப்பட உள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் மீது பங்குதாரர்கள் அவர்களது வாக்குரிமையின் படி வாக்குகளை பதிவுசெய்வதற்கான வசதியை கம்பெனியானது பங்குதாரர்களுக்கு வழங்குகிறது என்பது இதன் மூலம் மேலும் பங்குதாரர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. பங்குதாரர்களுக்கு மின்னணுவியல் வாக்குப்பதிவு வசதியை வழங்குவதற்காக M/s. சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் நிறுவனத்தின் சேவையை கம்பெனியானது பயன்படுத்துகிறது.

கூட்டம் தொடர்பான அறிவிப்பின் நகலுடன் பயனாளி ஐடி மற்றும் பாஸ்வேர்டு ஆகியவற்றை இதர விஷயங்களுடன் சேர்த்து மின்னணுவியல் வாக்குப்பதிவு தொடர்பான தகவல்களை கம்பெனியானது பங்குதாரர்களுக்கு 30.08.2017 அன்று அனுப்பியுள்ளது. இந்த தகவல் மற்றும் கூட்டம் தொடர்பான அறிவிப்பை கம்பெனியின் இணையதளத்திலும், M/s. சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் நிறுவனத்தின் https://www.evotingindia.com. என்ற இணையதளத்திலும் காணலாம்.

மின்னணுவியல் வாக்குப்பதிவு 19.09.2017 அன்று காலை 9.00 மணி (IST) முதல் துவங்குகிறது. 21.09.2017 அன்று மாலை 5.00 மணிக்கு (IST) முடிவடைகிறது. மேற்குறிப்பிடப்பட்ட தேதி மற்றும் நேரத்திற்கு பிறகு மின்னணுவியல் வாக்குப்பதிவு அனுமதிக்கப்பட மாட்டாது.

கட்-ஆப் தேதி அதாவது 15.09.2017 அன்றுள்ளபடி பங்குதாரர்கள் பதிவேட்டில் இடம் பெற்றுள்ள பெயர்களைக்கொண்ட பங்குதாரர்களுக்கு மட்டுமே மின்னணுவியல் வாக்குப் பதிவில் பங்குபெறவும், கூட்டத்தின்போது வாக்குப்பதிவில் பங்குபெறவும் வாய்ப்பு வழங்கப்படும்.

கூட்டம் தொடர்பான அறிவிப்பு அனுப்பப்பட்டதற்கு பிறகும், கட்-ஆப் தேதி அதாவது 15.09.2017 தேதிக்குப் பிறகும் பங்குகளைப் பெற்றிருப்பவர்கள், மின்னணுவியல் வாக்குப்பதிவு தொடர்பான தகவல்கள் மற்றும் பயனாளி ஐடி மற்றும் பாஸ்வேர்டு ஆகிய விவரங்களைக் கொண்ட கூட்டம் தொடர்பான அறிவிப்பை investors@arihants.co.in என்ற இணையதளத்திலிருந்து கேட்டு பெற்றுக்கொள்ளலாம். மேலும் அவைகளை கம்பெனியின் இணையதளத்திலும், CDSL நிறுவனத்தின் இணையதளத்திலும் காணலாம்.

மின்னணுவியல் வாக்குப்பதிவு மூலம் தங்களது வாக்குகளை பதிவு செய்த பங்குதாரர்கள் கூட்டத்தில் பங்குபெறலாம். ஆனால் மீண்டும் அவர்கள் வாக்குப்பதிவை மேற்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

மின்னணுவியல் வாக்குப்பதிவு முறையில் வாக்கைப்பதிவு செய்யாத பங்குதாரர்கள் கூட்டத்தின்போது பிசிக்கல் வாக்குப்படிவம் மூலம் தங்களது வாக்கை பதிவு செய்யலாம். கூட்டத்தில் பங்குபெறும் பங்குதாரர்களுக்கு பிசிக்கல் வாக்குச்சீட்டு மூலம் வாக்களிக்கும் வசதி வழங்கப்படும்.

வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டத்தில் வாக்குப்பதிவுப்பணியை சட்டப்படியும், நேர்மையாகவும், வெளிப்படையாகவும் நடத்துவதற்காக இயக்குனர்கள் குழுவானது சென்னை கம்பெனி செயலாளர் பயிற்சி பெற்ற திருமதி G.சுபாஸ்ரீ அவர்களை ஆய்வாளராக நியமனம் செய்துள்ளது. மின்னணுவியல் வாக்குப்பதிவு தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் / முறையீடுகள் இருப்பின், பங்குதாரர்கள்/பயனாளி உரிமையாளர்கள் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்புகொள்ளலாம்:

திரு. முரளி, M/s.கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், பதிவாளர் மற்றும் பங்கு மாற்று ஏஜெண்ட், சுப்பிரமணியன் பில்டிங், எண்.1, கிளப் ஹவுஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002. போன்: 2846 0390, இ-மெயில்: investors@arihants.co.in

இயக்குனர்கள்குழுவின் ஆணைப்படி
அரிஹந்த் பவுண்டேஷன்ஸ் & ஹவுசிங் லிமிடெடுக்காக
ஒ-ம்/- (கமல் லுனாவத்)
நிர்வாக இயக்குனர்
DIN:00087324

தேதி: 30.08.2017
இடம்: சென்னை

ராஜேஸ்வரி இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்

(CIN: L72300TN1993PLC024868)

பதிவு அலுவலகம்: பிளாட் நெ.248, கதவு எண்.18/23, 2-வது குறுக்கு தெரு, கிழக்கு சிஐடி நகர், நந்தனம், சென்னை-600 035,

போன்: 044-4552 2434, இணையதளம்: www.rflindia.org. **இ-மெயில்:** rajeswariltd@gmail.com

வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டம், மின்னணு வாக்குப்பதிவு தகவல் மற்றும் புத்தகம் மூடும் தேதிகள் பற்றிய அறிவிப்பு

31.03.2017 அன்றுடன் முடிந்த நிதியாண்டுக்கான வருடாந்திர அறிக்கை இணைக்கப்பட்ட, பங்குதாரர்களின் பதிவு செய்யப்பட்ட முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டம் தொடர்பான அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட அலுவல்கள் பற்றி பரிசீலிப்பதற்காக கம்பெனியின் பங்குதாரர்களின் 24-வது வருடாந்திர பொதுப்பேரவைக் கூட்டம் (AGM) செப்டம்பர் 27, 2017 புதன்கிழமை அன்று பிற்பகல் 02.45 மணிக்கு ரெட்சன் ஹோட்டல் அபார்ட்மென்ட்ஸ், எண்.287, மா.பொ.சி. முதல் தெரு, ஸ்ரீகாமகோடி நகர், பள்ளிக்கரணை, சென்னை-600 100 என்ற முகவரியில் நடைபெற உள்ளது என்பது இதன் மூலம் அறிவிக்கப் படுகிறது.

கம்பெனியில் அல்லது டெபாசிட்டரி பார்ட்டிசிபன்ஸ்களில் தங்களது இ-மெயில் முகவரிகளை பதிவுசெய்துள்ள பங்குதாரர்களுக்கு இ-மெயில் மூலம் வருடாந்திர பொதுப்பேரவைக் கூட்டம் தொடர்பான அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதர பங்குதாரர்கள் மேற்சொன்ன ஆவணங்களின் வன்பொருள் நகல்களை கேட்டு விண்ணப்பித்து பதிவு செய்யலாம். கம்பெனி அல்லது டெபாசிட்டரி பார்ட்டிசிபன்ட்ஸ்களில் இ-மெயில் முகவரிகளை பதிவு செய்யாத பங்குதாரர்களுக்கு வருடாந்திர அறிக்கையின் பிசிக்கல் நகல்கள் அனுப்பப்பட்டுள்ளது. கம்பெனியானது பங்குதாரர்களுக்கு வருடாந்திர அறிக்கையை அனுப்பும் பணியை 19.08.2017 சனிக்கிழமை அன்று நிறைவுசெய்துவிட்டது.

வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டம் தொடர்பான அறிவிப்பு மற்றும் ஆண்டறிக்கை ஆகியவை கம்பெனியின் www.rflindia.org என்ற இணையதளத்தில் மேலும் வெளியிடப்பட்டுள்ளது. வருடாந்திர அறிக்கை கிடைக்கப்பெறாத பங்குதாரர்கள் கம்பெனியின் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் அல்லது இதன் நகலை கேட்டு எழுத்துப்பூர்வமாக கம்பெனி செயலாளருக்கு மேற்குறிப்பிடப்பட்ட இ-மெயில் முகவரிக்கு அல்லது கம்பெனியின் பதிவு அலுவலக முகவரிக்கு விண்ணப்பிக்கலாம். வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டத்தில் பரிசீலிக்கப்பட உள்ள அலுவல்கள் தொடர்பான ஆவணங்கள் கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு உள்ளது. அதனை கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் பொதுப்பேரவைக்கூட்டம் நடைபெறும் தேதி வரை ஏதேனும் வேலை நாளில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

2013-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின் 108-வது பிரிவின் கீழும், 2014-ம் வருடத்திய கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிமுறைகளின் கீழும், 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 44-வது விதிமுறையின் கீழும், சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) நிறுவனத்தின் மின்னணுவியல் வாக்குப்பதிவு சேவை மூலம் கம்பெனியின் பங்குதாரர்கள் தங்களது வாக்குகளை மின்னணுவியல் வாக்குப்பதிவு மூலம் பதிவு செய்யும் வசதியை வழங்குவதில் கம்பெனியானது மகிழ்ச்சியடைகிறது. மின்னணுவியல் வாக்குப்பதிவு காலம் 24.09.2017 அன்று காலை 9.00 மணிக்கு தொடங்கி 26.09.2017 அன்று மாலை 5.00 மணிக்கு முடிவடைகிறது. 26.09.2017 செவ்வாய்கிழமையன்று மாலை 5.00 மணிக்கு பிறகு மின்னணுவியல் வாக்குப்பதிவு மேற்கொள்ள இயலாது.

20.09.2017 புதன்கிழமையன்று (கட்-ஆப் தேதி) அன்று உள்ளபடி பங்குதாரர்கள் வைத்திருக்கும் சம பங்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் வாக்குரிமை நிர்ணயிக்கப்படும். பங்குதாரர்கள் அதே தேதியில் பங்குகளை வைத்திருந்தால் அவர்கள் மின்னணுவியல் வாக்குப்பதிவு மூலம் தங்களது வாக்கைப்பதிவு செய்ய தகுதி பெற்றவர்கள் ஆவர். கம்பெனியின் www.rflindia.org என்ற இணையதளத்திலும் மற்றும் CDSL நிறுவனத்தின் www.cdslindia.com என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ள வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டம் தொடர்பான அறிவிப்பில் மின்னணுவியல் வாக்குப்பதிவு தொடர்பான விவரங்கள் உள்ளது. மின்னணுவியல் வாக்குப்பதிவு தொடர்பாக விசாரணைகள் ஏதேனும் இருப்பின் பங்குதாரர்களுக்கான கேள்விகள் கேட்கப்படும் பிரிவுக்கு (FAQ) தொடர்புகொள்ளலாம். மற்றும் www.evotingindia.co.in என்ற இணையதளத்தில் உள்ள பங்குதாரர்களுக்கான மின்னணுவியல் வாக்குப்பதிவு நடைமுறை பிரிவுக்கு தொடர்பு கொள்ளலாம். அல்லது இலவச தொலைபேசி எண்.1800-200-5533 என்ற எண்ணிற்கு தொடர்புகொள்ளலாம். அல்லது பதிவாளர், கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், சென்னை, போன்:044-2846 0390, E.mail: investor @cameoindia.com. என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளலாம். மின்னணுவியல் வாக்குப்பதிவு என்பது விருப்பத்துக்கு உட்பட்டது ஆகும். மின்னணுவியல் வாக்குப்பதிவு மூலம் பங்குதாரர்கள் ஒருமுறை வாக்களித்துவிட்டால் அதில் திருத்தம் மேற்கொள்ள இயலாது. அல்லது வருடாந்திர பொதுப்பேரவைக்கூட்டத்தின் போது மீண்டும் வாக்களிக்க இயலாது என்பதை தயவு செய்து அறியவும். இருப்பினும் பங்குதாரர்கள் பொதுப்பேரவைக்கூட்டத்தில் கலந்துகொள்ளலாம். விவாதங்களிலும் பங்கேற்கலாம். மின்னணுவியல் வாக்குப்பதிவு முடிவு கம்பெனியால் அதன் www.rflindia.org என்ற இணையதளத்தில் வெளியிடப்படும். மேலும் பங்கு வர்த்தக நிறுவனத்திற்கும் தெரிவிக்கப்படும்.

பங்குதாரர்களுக்கு வருடாந்திர அறிக்கையுடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட்ட வருகை பதிவேடு குறிப்பின் படி கூட்டம் நடைபெறும் இடத்திற்குள் செல்ல பங்குதாரர்கள் அனுமதிக்கப்படுவார்கள். மின்னணுவியல் மூலம் வருகைப்பதிவேடு குறிப்புகளை பெற்றுக்கொண்ட பங்குதாரர்கள் அவைகளை பூர்த்தி செய்து வருடாந்திர பொதுப்பேரவைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக பதிவு கவுண்டரில் சமர்ப்பிக்க வேண்டும். டூப்ளிகேட் வருகை பதிவு குறிப்புகள் வழங்கப்படமாட்டாது என்பதை தயவு செய்து அறியவும்.

2013-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின் 91-வது பிரிவின் கீழும், 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 42-வது விதிமுறையின் கீழும், பங்கு வர்த்தக நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் படியும், கம்பெனியின் பங்குதாரர்கள் பதிவேடும், பங்கு மாற்று புத்தகங்களும் 21.09.2017 முதல் 27.09.2017 வரை (இந்த இரு தினங்கள் உள்பட) மூடப்பட்டிருக்கும்.

ராஜேஸ்வரி இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெடுக்காக
ஒ-ம்/-
G.ராமமூர்த்தி
நிர்வாக இயக்குனர்
(DIN:00060323)

இடம்: சென்னை
தேதி: ஆகஸ்ட் 31, 2017

குறிப்பு: கூட்டத்தில் கலந்துகொண்டு வாக்களிக்கும் தகுதி பெற்ற ஒரு பங்குதாரர் தனக்குப் பதிலாக கூட்டத்தில் கலந்துகொண்டு வாக்களிக்க ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட பதிலிகளை நியமிக்கலாம். அந்தப் பதிலி அல்லது பதிலிகள் ஆனவர் கம்பெனியின் பங்குதாரர் அல்லது பங்குதாரர்களாக இருக்கத்தேவையில்லை. கூட்டம் நடைபெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு 48 மணி நேரத்திற்கு முன்னதாக பதிலி நியமனப்படிவத்தை பூர்த்திசெய்து கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.